பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 07 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி, இங்கிலாந்து மன்னர் சார்லசை சந்தித்து இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.
- இந்தியா - இங்கிலாந்து இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால், திருப்பூர் நகரம் பெருமளவு பயனடையும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.
- திமுக ஆட்சியில் தமிழகத்தின் தொழில்வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
- உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இங்கிலாந்து மன்னர் சார்லசை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார். இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தியா - இங்கிலாந்து இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியிருப்பது இருதரப்பு வர்த்தகத்திற்கு மேலும் ஊக்கமளிக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியாவின் முன்னேற்றம் குறித்து பிரதமர், இங்கிலாந்து மன்னரிடம் விளக்கினார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, நீடித்த வளர்ச்சி உள்ளிட்டவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

ஆயுர்வேதா மற்றும் யோகாவின் நன்மைகளை உலகம் முழுவதும் கொண்டு செல்வது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினார்.

இங்கிலாந்தில் தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்கு நன்றி தெரிவித்த திரு. நரேந்திர மோடி, இந்தியாவுக்கு வருகை தருமாறு மன்னர் சார்லசுக்கு அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால், பின்னலாடை நகரமான திருப்பூர் பெரிதும் பயன்பெறும் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவின் ஜவுளி, காலணிகள், ஆபரணங்கள் மற்றும் கடல்சார் உணவுகளுக்கு பிரிட்டனில் நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு வர்த்தகம் ஆண்டுக்கு 34 பில்லியன் டாலர் அதிகரிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பெரிதும் பயனடைவார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜவுளி மற்றும் கடல்சார் பொருட்கள் மீதான இறக்குமதி வரி குறையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் உருவாக வழிவகுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மருத்துவப் பரிசோதனை ஆய்வகங்களின் தரத்தை உறுதி செய்யும் வகையில் தர நிர்ணய ஆய்வத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் சென்னையில் நேற்று தொடங்கி வைத்தார்.

முதற்கட்டமாக இது தொடர்பான பணிகள் செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் தொழில்துறை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி பகுதிகளில் நேற்று அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தொழில் முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை கேட்டும் அதை திமுக அரசு இதுவரை வெளியிடவில்லை என அவர் தெரிவித்தார்.

புதுக்கோட்டை உள்ளிட்ட 5 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் காவிரி - குண்டாறு திட்டத்தை அஇஅதிமுக அரசு தொடங்கியதாகவும் தற்போதைய அரசு அந்த திட்டத்தை கிடப்பில் போட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளதாகவும் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஆசிரியர்களின் கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்றத் தவறி விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் ஆசிரியர்களுக்கு துணை நிற்போம் என்று கூறியுள்ள துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், அரசுப்பள்ளி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்து ஏன் அக்கறை காட்டவில்லை என்றும் வினவியுள்ளார்.

பல நாட்களாக போராடி வரும் பகுதிநேர ஆசிரியர்களைப் பணிநிரந்தரம் செய்யாதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

19 ஆயிரத்து 260 ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள திரு. நயினார் நாகேந்திரன், பள்ளிக்கல்வித்துறையில் பல குறைபாடுகள் நிலவுவதாகவும் கூறியுள்ளார்.

<<<<>>>>

தொடர் மழை காரணமாக ஆழியாறு அணை முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது.

இதையடுத்து கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி, தேனி, தென்காசி, கோவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவின் சோச்சி பகுதியில் யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். 11 பேர் காயம் அடைந்தனர்.

<<<<>>>>

மக்களுக்கு தொலைதூர சட்ட உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 2 கோடியே 10 லட்சம் பேர் பயன் அடைந்துள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 10 ஆண்டுகளில் வனப்பரப்பு 16 ஆயிரத்து 630 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

இ-ஷ்ரம் இணையதளத்தில் இதுவரை 30 கோடியே 97 லட்சம் அமைப்பு சாரா தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டில் இதுவரை 479 ஏகலைவா பள்ளிகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக மத்திய பழங்குடியினர் நலத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

தேசிய நிதி அறிக்கை ஆணையத்தின் தலைவராக திரு நிதின் குப்தா பொறுப்பேற்றுள்ளார்.

<<<<>>>>

மாமல்லபுரத்தை அடுத்த நெம்மேலி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கடல்நீரை குடிநீராக்கும் ஆலையின் கட்டுமான பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி ஆசியா மரியம் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

வேலூர் அருகே புதிய மின் இணைப்பு வழங்க லஞ்சம் வாங்கிய மின்வாரிய ஊழியரை லஞ்ச ஒழிப்புத் துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் முதுநிலைப் பட்டயப் படிப்புக்கு ஆகஸ்ட் 3-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று செய்தி மக்கள் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளை மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் அனாஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-6, 13-11, 11-5 என்ற செட் கணக்கில் எகிப்தின் **Malika Elkarasky**-ஐ வென்றார்.

<<<<>>>>

லாகோசில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Anirban Ghosh – Krittwika Roy** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-9, 11-4, 11-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Mudit Dani – Taneesha Kotecha** இணையை வென்றது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று **Akash Pal – Poymantee Baisya** இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வீ ஷர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

இந்தோனேஷியாவின் **Solo-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-14, 21-15 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Phannachaet**-ஐ வென்றார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்புக்கு 225 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>